(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
Case No. C.C.104/16

DEPOSITION OF WITNESS FOR PW.4

| | | | |
|---|---|---|---|
| Name : | THOMAS | Caste: | SC |
| Father's Name: | RAMASAMY | Calling: | CARPENTER |
| Village: | ERIKUTHI | Religion: | CHRISITIAN |
| Taluk: | PERNAMBUT | Age: | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26 .09.18

## முதல் விசாரணை

நான் தச்சு வேலை செய்கிறேன். தேதி,மாதம் ஞாபகம் இல்லை சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக நானும் எனது நண்பர் ராபர்ட்டும் ஏரிக்குத்தி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். மகளிர் காவல்நிலையத்திலிருந்து 2 போலீசார் வந்து எங்களிடம் ஒரு படிவத்தில் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து செய்தேன். நான் அதைப்படித்து பார்க்கவில்லை: என்னுடன் ராபர்ட் என்பவர் கையெழுத்து செய்தார். எதற்காக அந்த கையெழுத்து என்று தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அ.த.கு.வி.

30.05.2014 மாலை 16.00 மணிக்கு குடியாத்தம் அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண். 21/2014 என்ற வழக்கில் காவல் ஆய்வாளர் உங்கள் முன்பாகவும் ராபர்ட் என்பவர் முன்பாகவும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜா, மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நீங்கள் இருவரும் சாட்சியாக சாட்சி கையெழுத்து செய்து விட்டு போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.